**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.93/2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW 9 , LW 9 ,**

| | |
|---|---|
| Name | சஜீவ் ஸ்லேட்டர் |
| Father's/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 7 day of September** 2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது பாண்டிச்சேரி பிம்ப்ஸ் மருத்துவகல்லூரியில் பேராசிரயாக பணியாற்றி வருகிறேன். கடந்த 08/09/2019 ம் தேதி பாண்டிச்சேரி பிம்ப்ஸ் மருத்துவகல்லூரியில் இனை பேராசிரயாக பணியில் இருந்தபோது சூனாம்பேடு காவல் நிலைய குற்ற எண்.216/2019 என்ற வழக்கில் இ.த.சா. பிரிவுகள் 279, 304(ஏ) இறந்து போன இரங்கநாதன் வயது 50 என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக சூனாம்பேடு காவல் நிலைய ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்தினை பெற்று காவலர் 2643 கோபிநாத் என்பவர் பிரேதத்தை அடையளம் காட்ட அன்று பகல் 2.45 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்க்கொண்டேன்.

2.உட்ற்கூறாய்வு செய்ததில் வெளிப்புற காயங்களள்

1.முகத்தின் இடது பக்கத்தில் 12x7 செ.மி அளவுள்ள இடத்தில் பலவகையான கன்றிய சிறாய்பு காயங்கள் காணப்பட்டது.

2.இடது முழங்கையில் 10x4 செ.மி பரப்பளவு உள்ள இடத்தில் பலதரப்பட்ட கன்றிய சிறாய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

3. வலது மற்றும் இடது கால்களில் 17x4 செ.மி பரப்பளவுள்ள இடத்தில் பலதரப்பட்ட கன்றிய காயங்கள் காணப்பட்டது.

4.இடது காலில் 7x1.5x தசை ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயமும் அதற்கு கீழாக உள்ள பீமர் டிபிய எலும்புகள் உடைந்து காணப்பட்டது.

3.உடம்பை உள்புறமான ஆய்வு செய்து பார்த்ததில்

1. கபாலத்தில் இடது பக்கத்தில் கன்றிய காயங்கள் காணப்பட்டது.

2.மன்டையோட்டின் இடது வெளிப்பக்கத்தில் உள்ள டெம்போரல் எலும்பு தொடங்கி இடது பக்க மன்டையோட்டின் கீழ்பகுதி வரையுள்ள 14x0.5 செ.மி அளவிற்கு எலும்பு உடைந்து காணப்பட்டது.

3.மூலையின் மேல்பகுதியில் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

4.மூலையின் இடது மேல்பகுதியின் வெளிபகுதி கிழிந்த காயம் 7x3 செ.மி அளவிற்கு காணப்பட்டது.

5.மூலையைய ஆய்வு செய்ததில் உட்புறமாக இரத்தம் சிறு துகள்களாக கசிந்து காணப்பட்டது.

6. இடதுப்பக்க நெஞ்சு கூட்டில் 3 ல்இருந்து 9 வரையுள்ள விளா எலும்புகள மூன்பகுதியிலும், பின்பகுதியிலும் உடைந்து காணப்பட்டது.

7. இடதுபக்க நுரையீரலில் பலபகுதிகளில் சிதைந்த காயங்கள் அதன் மேல்லுள்ள விலா எலும்புகளும் உடைவுகளுக்கு ஏற்பப காயங்கள் காணப்பட்டது வலது நுரையிரல் சீராக காணப்பட்டது.

4.அவர் மன்டையோட்டு மற்றும் மூலையில் ஏற்பபட்ட காயத்தினாலும், இறந்திருக்க கூடும் என்று நான் சான்று வழங்கனேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வழங்கிய அறிக்கை ஆகும் (**அந்த அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5.இதே வழக்கில் இறந்து போன ஐஸ்வர்யா என்வரின் பிரேதத்தினை இளநிலை காவலர் 1949 ஜெயபால் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனையை பகல் 03.55 க்கு மேற்கொண்டேன்.

6.உட்ற்கூறாய்வு செய்ததில் வெளிப்புற காயங்களள்

1.முதுகு பக்கத்தில் 13.5x7.5 செ.மி அளவுள்ள பரப்பளவில் பலவகையான கன்றிய சிறாய்பு காயங்கள் காணப்பட்டது.

2. இருகால்களிலும் 10x4 செ.மி பரப்பளவுள்ள இடத்தில் பலவகையான கன்றிய சிறாய்பு காயங்கள் காணப்பட்டது.

3. முதுகில் இடது பக்கத்தில் 6.5x3.5 பரப்பளவுள்ள இடத்தில் பலவகையான கன்றிய சிறாய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

7.உடம்பை உள்புறமான ஆய்வு செய்து பார்த்ததில்

1.கபலத்தின் இடது பக்கத்தின் பரவலாக கன்றிய காயங்கள் காணப்பட்டது.

2.மன்டையோடு இடது பின்பக்கம் தொடங்கி இடது கீழ்பகுதி வரைவுள்ள இடமா 11x0.5 செ.மி அளவிற்கு எலும்பு உடைந்து காணப்பட்டது.

3.மூலையின் மேற்பகுதியில் இரத்தம் கசிந்து காணப்பட்டது.

4.வலது பக்க மூலையில் வெளிபுறமும், பின்புறமும், கன்றிய காயங்கள் காணப்பட்டது.

5. இடது மூலையின் பின்பகுதியில் 6x1.5 செ.மி அளவிற்கு சிதைந்து காணப்பட்டது.

6.மூலையை உட்கூறாய்வு செய்ததில் இரத்தம் துகள்காக காணப்பட்டது.

8.அவர் மன்டையோட்டு மற்றும் மூலையில் ஏற்பபட்ட காயத்தினாலும், இறந்திருக்க கூடும் என்று நான் சான்று வழங்கனேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வழங்கிய அறிக்கை ஆகும் (**அந்த அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

இல்லை

<u>மறு விசாரணை</u>

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate
**Cheyyur.**